விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 20 [illegible] இதழ் 50

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-4-1987

யாழ். போதனா வைத்தியசாலை

## தொடர்ந்து பாதிக்கப்பட்டால் வைத்தியசேவைகளுக்கு மாற்றுத்திட்டம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். கோட்டை இராணுவத்தின் தாக்குதலுக்கிலக்காகி வரும் யாழ் வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்படையும்போது மாற்று நடவடிக்கைகளில் இறங்குவதற்கான மாற்றுத் திட்டங்கள் சிலவற்றை யாழ். வைத்திய சங்கம் தயாரித்து வருகிறது.

யாழ். வைத்தியசாலையின் மீது இராணுவத் தாக்குதல்கள் தொடர்வதினால், யாழ் வைத்தியசாலையைப் பாவிக்க முடியாத கட்டத்தில் வைத்திய நிபுணர்களை அண்மையில் உள்ள தனியார் வைத்திய நிலையங்களில் சேவைக்கு அமர்த்துவது சர்பந்தமாக தனியார் மருத்துவ நிலையங்களுடன் யாழ். வைத்திய சங்கம் தொடர்பு கொண்டுள்ளது.

கிராம மட்டத்தில் வைத்திய சிகிச்சை ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு அப்பகுதியில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள். பிரஜைகள் குழுக்கள் முன்வர வேண்டுமென்றும், வைத்திய சங்கம் வேண்டுகோள் விடுத்

(5-ம் பக்கம் பார்க்க)

நோயாளர்மீது மற்றுமொரு தாக்குதல்:

# வல்லையில் அம்புலன்ஸ்மீது ஹெலிகுண்டு வீச்சு; நோயாளர் நால்வருடன் சாரதியும் தீக்கிரை

(க. குணலிங்கம்)

நோயாளரை ஏற்றிக்கொண்டு யாழ். ஆஸ்பத்திரி சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டியை நோக்கி வல்லைவெளியில் ஹெலிகொப்டரிலிருந்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் நான்கு நோயாளரும், சாரதியும் கருகி மாண்டனர். அம்புலன்ஸ் வண்டி முற்றாக எரிந்து சேதமடைந்தது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து நான்கு நோயாளரையும் ஏற்றிக்கொண்டு யாழ். பெரியாஸ்பத்திரியை நோக்கி வந்துகொண்டிருந்த மந்திகை ஆஸ்பத்திரிக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி வல்லைவெளியில் முனியப்பர் கோவிலுக்கருகாமையில் வந்து கொண்டிருந்தபோது ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஹெலிகொப்டரிலிருந்து அம்புலன் வண்டியை நோக்

(5ம் பக்கம்பார்க்க)

## ● திடீர் அதிரடி தாக்குதலின் பின்

# புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்

# மலியத்தனை இராணுவமுகாம்

## பல சிப்பாய்கள் பலி, 6 புலிகள் 'வீரமரணம'

(என். கே. துரைசிங்கம்)

**வல்வை மலியத்தனை இராணுவமுகாம்மீது விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித்தாக்குதலை நேற்று அதிகாலை மேற்கொண்டதில் பல இராணுவத்தினர் பலியாகினர். நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுடன் முகாமும் புலிகளின கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதேவேளை ஆறு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.**

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

சுமார் ஒரு மணி நேரத் தாக்குதலின் பின் மேற்படி இராணுவமுகாம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இம்முகாம்மீது விடுதலை புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் ஒரு மணித்தியாலம் வரை இத்தாக்குதல் நீடித்தது.

இராணுவத்தினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டபோது புலிகள் தொடர்ந்து உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டு முகாமிற்குள் முன்னேறிச்சென்றனர்.

இதனால் இராணுவத்தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் புலிகளின் எதிர்த் தாக்குதலைக் கண்டு அஞ்சிய படையினர் வல்வை முகாம் நோககி ஓடத்தொடங்கினர்கள்.

இதேவேளை இத்தாக்குதல் நடந்துகொண்டிருந்தபோது விமான படையினர் ஹெலிகாப்டரிலிருந்து தாக்குதல் நடத்தியதாகவும் புலிகளின் பதில் தாக்குதலில் ஹெலி மேலெழுந்து சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மக்கள் குடிபெயர்ந்தனர்

[அச்சுவேலி நிருபர்]

உடுப்பிட்டிவல்லை பகுதியில்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலையின் அடுத்த கட்டமாக முகாம்கள் தாக்கப்படுகின்றன – தலைவர் பிரபா

யாழ்ப்பாணம், வெள்ளி.

"சிறிலங்கா இராணுவத்தைக் கடந்த ஒருவருடத்துக்கு மேலாக அளப்பரும் தியாகங்களுடன் கட்டுப்படுத்தி தளப்பிராந்தியத்தைப் பேணி வரும் விடுதலைப்போரின் அடுத்த கட்டமாக இராணுவத்தை விரட்டி அடித்து பூரண விடுதலையடைவதை நோக்கமாகக்கொண்டு இன்று இராணுவ முகாம்கள் தாக்கப்பட்டு முறியடிக்கப்பட்டு வருகின்றன''

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே பிரபாகரன் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த மாதம் 23ந் திகதி யாழ். கோட்டை இராணுவ முகாமின் அருகேயுள்ள பொலிஸ் விடுதி இராணுவ முகாம், நேற்று அதிகாலை வல்வை மலியத்தனை மினி இராணுவமுகாம் ஆகியன விடுதலைப்புலிகளால் வெற்றிகரமான தாக்குதல்மேற்கொள்ளப்பட்ட பின்னர் திரு. பிரபாகரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

"தமிழினத்தின் பூரண விடிவுக்கான இறுதிக்கட்டபோரின் வரலாற்று சாதனைகள் தொடர்கின்றன. தமிழினத்தின் மீது இனவெறி அரசு நடத்தும் இன ஒழிப்புப் போராட்டத்தின் முற்றுப்புள்ளிக்காக தொடங்கப்பட்ட ஓர் புதிய அத்தியாயம் தன் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறிவருகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## 150 தீவிரவாதிகள் தாக்குதல் படையினர் இருவர் பலி

அரசு அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமை நோக்கித் தீவிரவாதிகள்பலத்தாக்குதலை இன்று அதிகாலை மேற்கொண்டபோது படையினர் இருவர் பலியானார்கள் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ராணுவ முகாம் தாக்குதல் குறிதது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

"வல்வெட்டித்துறை இராணுவ முகாம் மீது சுமார் 150 தீவிரவாதிகள் பீரங்கிகள் இயந்திர துப்பாக்கிகள், சகிதம் பல்முனைத் தாக்குதலைத் தொடுத்தார்கள்.

"பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதல் செய்தபோது தீவிரவாதிகள் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்றதாகக் கருதப்படும் 3 லொறிகள் சேதமடைந்தன.

"இத்தாக்குதலில் பேகொட என்னும் இடத்தைச் சேர்ந்த ஓ எம் குணரட்ண பண்டா, கெப்பிட்டி கொல்லாவ என்னும் இடத்தைச் சேர்ந்த பி. செனிவிரெத்தின என்னும் படையினர் இருவர் பலியானர்கள. (எ)

## ராஜீவின் முக்கியகடிதம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு நிருபர்)

இலங்கை விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் திரு: ராஜீவ் காந்தியின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கடிதமொன்றை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்' ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் நேற்றுக் கையளித்தார்.

இக்கடிதத்தை தொடர்ந்து ஜனாதிபதி ஜெயவர்த்தன தமது உயர்மட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசனை நடத்தினர். மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இக்கடிதத்தின் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை எனினும் ஜனாதிபதி உயர் மட்ட ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளமையால் இக் கடிதம் முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். (எ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு இறைச்சிக் கோழிகள் (Broilers) விலையினைக் குறைத்துள்ளோம். 1 கிலோ ரூபா 42/- வீதம் தேவையான அளவில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். நல்ல இனப்பன்றிகளும், பன்றிக் குட்டிகளும் எம்மிடம் விற்பனைக்குஉண்டு. தொடர்பு: அண்ணுபாம், இணுவில். ஏ-3908

## தேவை

Radio திருத்தும் ஸ்தாபனத்தை உடன் பொறுப்பேற்று தனியே நடத்தக்கூடிய ஒருவர் தேவை. ஒப்பந்த அடிப்படையிலும் கலந்தாலோசிக்கலாம். 05-04-87ல் நேரில் தொடர்பு கொள்ளவும்: B. E. T. E. R. Works. Hospital Lane, Manipay. சி-8368

இனிப்புத் தொழிற்சாலைக்கு இனிப்பு தயாரிக்கும் வேலையாளும் [பாஸ்] உதவியாளும், கச்சான்அலுவா தயாரிக்கும் வேலையாளும் தேவை. 4-4-87 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நேரில் வரவும். தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: "பராசக்தி அச்சகம்", கே. கே. எஸ். வீதி, கொக்குவில். சி-8376

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம், நீர் முதலிய வசதிகளோடு நான்கு அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல.சி8372 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-8372

யாழ்.நகரில் உள்ள நிறுவனத்தை, நிர்வகித்து கணக்கு எழுதக்கூடிய ஒருவர் தேவை. விண்ணப்பதாரி 40—45 வயதுக்கு இடைப்பட்டவராகவும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் "சுவீட்ஸ்" போடக்கூடிய கோக்கியும் தேவை. விபரங்களுக்கு ரவர் கோப்பி அன் கூல் பார், 324, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம். சி-8352

WANTED

Wanted Delivery-boys with Security Deposit. Call in person with testimonials. Manager, Cyrils Pharmacy, 50, Martyn Road, Jaffna. (C-8366)

## விற்பனைக்கு

Bairaha Farms Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். சேவற்குஞ்சுகள் Hybro புரொயிலர் குஞ்சுகள் 10-4-1987 வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ் பிரம்படி கொக்குவில். (சி 8277)

Golden Comet 1 மாத பிறவுன் பேட்டுக்குஞ்சுகள். Hypeco 1 வார வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (சி 8268)

பரந்தன் 3ம் வாய்க்காலில் பூங்காவனச்சந்திக்கு அருகாமையில் 15 ஏக்கர் நெற்காணி [இரண்டு போகம் செய்யக் கூடியது] உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: 37/3, சிவகுருநாதர் லேன், பிறவுன் ரோட், யாழ்ப்பாணம். சி-8359

WANTED

Wanted Madical Representatives with a high command in English. Educational Qualification:- Advance Level with Chemistry as a subject. Advt. No. C 8365, C/o Eelanadu Jaffna. C 8365

## அறிவித்தல்

1987-ம் ஆண்டு சித்திரை மாதம் 05-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி தொடக்கம் மாலை 4-30 வரை அவசரதிருத்த நிர்மாண வேலைகளுக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் (ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மாங்குளம், துணுக்காய்) மின் விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

மின்பொறியியலாளர்,
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
மாங்குளம்.

ஏ-3775

## விற்பனைக்கு

கோயில்களுக்குத் தேவையான பெரியமணி, செப்பு பித்தளை கிடாரம், குத்து விளக்கு, திருவாசி, பூச்சாடி, மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், இறக்குமதிசெய்யப்பட்ட சில்வர்றே, செம்பு, குடம் றைஸ் பிளேற், கறிடிஸ், ரம்ளர்ஸ், கரண்டி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு. Honda C. D. 125, C. D. 90, C. B. 50 றக்கூன் சாளி என்பனவும் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ், 26 B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-8360

## வகுப்புக்கள்

பிரத்தியேக தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பமாகின்றன. 4-4-87 சனிக்கிழமை பி. ப. 2 மணி இராஜஸ்தான் தபால் கந்தோரடி, நெல்லியடி. சி-8174

A/L 89-ம் ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிக் கொண்டிருக்கின்றன. திரு. தம்பிராஜா அவர்களின் விலங்கியல் 4-4-87 காலை 6-30க்கு ஆரம்பம். திரு. மகாதேவா அவர்களின் இரசாயனவியல் மே மாதம் முதல் வாரம் ஆரம்பம். பெயர்களைப் பதியவும். பௌதிகவியலில்- "அளவீடுகள்", 'தாவரவியலில் அலகு1' உம் ஆரம்பமாகியுள்ளன. நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், திருநெல்வேலி. (சி- 8281)

A/L 89 Aug. பிரிவு C O/L 87 Dec. (மீட்டல் வகுப்பு) ஆரம்ப உதவி ஆசிரியர்களுக்கான பொது அறிவு பொது உளச்சார்பு போட்டிப் பரீட்சை வகுப்புகள். ஆரம்பம்: 1987 - 4 - 4 - மு. ப. 9-30 Science Centre, Nelliady, Karaveddy. (சி-8303)

## அறிவித்தல்

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

ஆறுமுகம் சரவணமுத்து உடையார் இராசேந்திரம் விதானையார், இல. 66, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்
- வழக்காளி

வழ. இல: 30/ந. சொ.

எதிராக

1. மாரிமுத்து பொன்னம்பலம் முருகேசு
2. செல்லையா தனபாலசிங்கம்
3. நாகநாதர் தர்மலிங்கம் திருநாவுக்கரசு
4. வயித்திலிங்கம் மயில்வாகனம்
5. கார்த்திகேசு நித்தியானந்தன்
6. ஏகாம்பரம் நடராசா

யாவரும் புங்குடுதீவு மத்தி, பெருங்காடு, புங்குடுதீவு
- எதிராளிகள்

இத்தாற் சகலருமறிக.

புங்குடுதீவு மத்தி, பெருங்காடு மூத்தநயினார்புலம் ஸ்ரீவரசித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை உறுப்பினர்களின் பிரதிநிதிகள் என்ற தகைமையில் இந்நீமதின்றின் அனுமதியுடன் மேலே சொல்லப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக வழக்காளி தனது பிராதில் வேண்டும் நிவாரணங்களுக்கு மேலே சொல்லப்பட்ட வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

ச. இளங்கோவன்
வழக்காளியின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சு. வ. கணேசன்
பதிவாளர்.

30-03-87 (சி- 8305)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர் கந்தையா ஏகாம்பரம்
(கதிரிப்பாய், அச்சுவேலி)

அன்னை மடியில்: 28-08-1926

இறைவன் அடியில்: 07-03-1987

1987-03-07ஆம் திகதி இயற்கை எய்திய அமரர் கந்தையா ஏகாம்பரம் அவர்களின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டு இரங்கற்செய்தி அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றி. அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 05-04-87 ஞாயிற்றுக் கிழமை கதிரிப்பாயில் நடைபெறும். அந்நாணம் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறும் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கதிரிப்பாய்,
அச்சுவேலி. (சி 8272)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி கிறிஸ்ரியானுள் மனோரஞ்சிதம் செல்லத்துரை

தோற்றம்: 21-10-1920
மறைவு: 31-03-1986

கனடாவில் காலம் சென்ற ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பராயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கிறிஸ்ரியானுள் மனோரஞ்சிதம் செல்லத்துரை அவர்களின் ஞாபகார்த்த தோத்திர ஆராதனை ஏழாலை வடக்கு தென் இந்திய திருச்சபை ஆலயத்தில் 4-4-87ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. வி. ஏ. துரைராசா
உடுவில்,
திரு. வி. பி. செல்வரத்தினம் ஏழாலை.
(சகோதரர்கள்.

"ஜெபஇல்லம்",
ஏழாலை வடக்கு,
ஏழாலை. (சி 8373)

## Wanted

Wanted for St. John's College Welfare Officc, a Shorthand-typist. Knowledge of accounts an additional qualification. Male preferred. Apply before 17th April 1987 to: Manager, St. John's College, Jaffna.

A-3904

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 6576 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை மேற்கு விஸ்வலிங்கம் அம்பலவாணருக்கு விற்பனவுத் திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை ரூ.24,000/- மேலும் இதில் ரூ.12,000/-க்கு 13--5-1986 தொடக்கம் 19-9-1986 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 55% வீத வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடமொன்றுக்கு 12 % வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ. 4893/20 மற்றும் விற்பனைக்குரிய சலார்களும், இத்தொகையை பிரதிவாதிகள் தெல்லிப்பழை கிழக்கு (1) மாணிக்கம் செல்வரத்தினம் (2) பெண் பவளம் ஆகிய இவர்களிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1987ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதி புதன்கிழமை [22-4-1987] முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிட்பழை கோவிறபற்று தெல்லிப்பழை கிழக்கிறை சிவகாவத்தையும் செம்பொன்குன்றும் "நிலப்பரப்பு மூன்றும் [3] பனைகளும் எல்லை கிழச்குமுருகன் நாகமுத்துவினுதனம், வடக்கு நாகமுத்து சுப்பிரமணியத்தினுதனம். மேற்கு மிகுற்யாதனம் தெற்கு முத்தன் கந்தனுக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும் இன்னும் வடக்குப்பக்கமாயிருக்கும் முருகேசு சங்கரப்பிள்ளையின் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்பங்கும் வழிவாய்க்காலும், வடக்குப் பக்கமாக இருக்கும் ஒழுங்கைக்கு இக்காணியிலிருந்து போக்குவரத்துசெய்யும் ஆறுமுழ அகலப்பாதை உரித்தும். ஆனல் இக்காணியிலிருந்து மிகுதி ஆதனத்துக்கு குறித்த பாதையிலிருந்து போக்குவரவு செய்யும் நாலுமுழ அகலப்பாதை புறநீங்கலாக.

வ. சி. மகாதேவன்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்.

553, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி 8374)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

திருநிறை செல்வன்

மணமகன்: **ஆ. குகமூர்த்தி (குகன்)**
(Resource Sciences Arabia Limited, Yanbu, Saudi Arabia.)

திருநிறை செல்வி

மணமகள்: **பா. சசிகலா (சசி)**
(விவேகானந்தா மகாவித்தியாலயம், கொழும்பு)

இடம்: நல்லூர் சிவன்கோவில்
காலம்: 04—04—87 சனிக்கிழமை
சுபமுகூர்த்தம்: காலை 11-44 முதல் 12-42 மணிவரை

வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லத்தில் ஞாயிறு மாலை 3 மணி முதல் 7 மணிவரை

திருமண வைபவத்திற்கு தாங்கள் யாபேரும் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
க. ஆறுமுகம்
(இளைப்பாறியஆசிரியர்கள்)
'அம்பாள் அகம்'',
மருதனார் மடம், இணுவில்.

திரு. திருமதி
சு. பாலசிங்கம்,
33, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(எ 3909)

# உகண்டாவில் அரச படையினர் தாக்குதலில்
# 203 கிளர்ச்சியாளர் பலி

கம்பாலா, ஏப். 2

**உகண்டா அரச படை வீரர்கள் வடபகுதி நகரமான 'லீமா'வில் மூன்ருவது தடவையாக கிளர்ச்சியாளர்களுக்கெதிராக நடாத்திய பெரும் தாக்குதலொன்றில் 203 கிளர்ச்சியாளர்கள் பலியானதுடன் ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னுள் ஜனுதிபதிகள் இடிஅமீனனிதும், நெல்சன் ஒபேட்டேயினதும் ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் கடந்த சில வாரங்களாக பல தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிருர்கள். அவ்வாருன நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் விதத்திலேயே நேற்றைய இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் கிளாச்சியாளர்தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும் அரசாங்க அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவிலிருந்து வடதிசையில் உள்ள லீமா நகரே பதவிநீக்கப்பட்ட முன்னுள் ஜனுதிபதி ஒபேட்டேயின்கிராமப்பகுதியாகும் நேற்று இங்கு இடம்பெற்ற பலமணி நேரத் தாக்குதலிலேயே இராணுவம் தமது தரப்பில் 5பேரை இழந்து கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை முறியடித்தது.

இதன்போது 203 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதுடன் 150 தானியங்கித் துப்பாக்கிகளு பெருமளவிலான துப்பாக்கிரவைகளும், கண்ணிவெடிகள், கைக்குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் கடந்த மாதமும் இராணுவத்திற்கு எதிராக நடத்திய இரு தாக்குதல்களும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும் அதில் கிளர்ச்சியாளர் தரப்பில் 4'5 பேர் கொல்லப் பட்டதாகவும் உகண்டா அரசு அறிவித்துள்ளது. (சி)

## நவீன விண்வெளி போர் விமானம் தயாரிப்பதில் சோவியத் வெற்றி

### அமெரிக்க சஞ்சிகை தகவல்

உலகச் செய்திகள்

வாஷிங்டன், ஏப். 2

சோவியத் யூனியன், விண்வெளியில் செயற்படக்கூடிய நவீனமயமான யுத்த விமானமொன்றை தயாரிப்பதில் வெற்றிகண்டுள்ளதாக அமெரிக்க சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் வெளியாகும் விமானப் போக்கு வரத்துவாரம் என்ற விண்வெளித் தொழில் நுட்பம் பற்றிய இந்தச்சஞ்சிகை இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

இப்புதிய விமானம் விண்வெளியிலுள்ள சோவியத் யூனியனின் நிரந்தர ஆய்வுகூடங்களை பாதுகாப்பதற்கும் அவை தாக்கப்படும் பட்சத்தில் ஒரு நொடிப் பொழுதில் பதில் தாக்குதலை நடாத்த பயன்படும் எனக் கூறுகிறது.

1990ம் ஆண்டளவில் செயற்படவிருக்கும் இந்த நவீன விமானத்தை சோவியத் யூனியன் இதுவரையில் நான்கு தடவைகள் பரீட்சித்துள்ளதாகவும் இதில் மேலும் சில நவீன முறைகளை பொருத்துவதற்காக தொடர்ந்தும் ஆய்வுவேலைகள் நடைபெற்று வருவதாகவும் அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளை மேற்கோள்காட்டி இச்சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 1990ம் ஆண்டளவில் சோவியத் யூனியனின் விண்வெளி ஆய்வுகூடத்தில் சுமார் 100 விண்வெளி வீரர்கள் எந்நேரமும் தங்கியிருக்கக் கூடியதாயிருக்குமென்றும் அச்சஞ்சிகை தெரிவித்துள்ளது (சி)

## குற்றவாளியைக் காப்பாற்றிய எதிரிநாட்டு விமானம்

பொன், ஏப் - 2

இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது 1945-ம் ஆண்டில் ஹிட்லரைக் கொலைசெய்ய ஜேர்மனியில் முயற்சிகள் நடந்ததல்லவா? இம்முயற்சியை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட பாரன் வாரன் சிலாவ் ரெண்ட் என்பவனை தூக்கிலிடுமாறு நாஸி கோர்ட் தீர்ப்பளித்தது.

தண்டனையை உடனே நிறைவேற்ற அந்த கோர்ட்டினுள்ளே விஷேசமாக அமைக்கப்பட்ட தூக்குமேடையில் அவன் நிறுத்தப்பட்டான்.

தூக்குப்போடும் ஊழியர் லிவரை இழுத்தபோது எதிரி நாட்டின் [நேசநாடுகள்] விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டதனுல் மிகப்பெரிய வெடிகுண்டொன்று அங்கு வெடித்தது. நீதிமன்றத்திலிருந்த அனைவரும் கொல்லப்பட்டனர். ஆனுல் தூக்கில் தொங்கவிருந்த 'பாரன் வாரன்' மட்டும் ஆச்சரியமாக உயிர்தப்பினுன். [சி]

## கம்பியூட்டர் சாஸ்திரம் மாணவன் உயிரைப் பறித்தது

[புதுடில்லி]

கம்பியூட்டர் ஒன்று ஒரு மாணவனின் எதிர்காலம் நன்ருக அமையாதென 'சாஸ்திரம்' தெரிவித்ததையடுத்து 27 வயதுடைய அம்மாணவன் தற்கொலைசெய்த பரிதாப சம்பவமொன்று அண்மையில் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.

முகாமைத்துவம் பயிலும் மாணவனுக்கு அடுத்த சில வருடங்களில் 2 பெரிய விபத்துகள்மூலம் உயிரிழப்பு அல்லது அவயவக்குறைவு ஏற்படுமென்றும், உயர்கல்வி நன்ருக அமையாதென்றும் கம்பியூட்டர் சாஸ்திரம் கூறியதாம். இதனுல் மனமுடைந்துபோன அம்மாணவன் தனது இடுப்புப்பட்டியை சுருக்குக் கயிருக மாற்றி தற்கொலைபுரிந்து கொண்டார். இம்மாணவனருகில் கம்பியூட்டர் சாஸ்த்திர விபரமும் அவர் எழுதிய கடிதமொன்றில் தற்கொலை பற்றிய விபரமும் குறிப்பிடப்பட்டிருந்தது. (சி)

## ஐந்துமுறையே நாம் பூமியைச் சுற்றலாம்

[ஜெனிவா]

நாம் சாதாரணமாக நடக்கும்போது சராசரி ஒரு நாளைக்கு 20,000 தடவைகள் காலடி எடுத்து வைக்கின்ருேம். இதன்படி பூமியை ஒருமுறை சுற்றி வலம்வர நாம் 100 மில்லியன் முறை காலடி எடுத்து வைக்கவேண்டும்.

இதற்கு 14 ஆண்டுகள் எடுக்கும். இந்தவகையில் பார்த்தால் ஒரு மனிதனின் சராசரி வாழ்க்கைக்காலமான 70 ஆண்டுகளில் அவனுல் ஐந்து முறை இந்தபூமியை சுற்றிவர முடியுமென்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. [சி]

## கிளியைக் கடத்தியோர் கூண்டில் இடப்பட்டனர்

(லண்டன்)

பராகுவா நாட்டில் அருகிவரும் கிடைத்தற்கரிய ஒருசோடி கிளிகளை ஐரோப்பாவிற்கு கடத்திச் சென்று அவற்றை 40,000 அமெரிக்க டாலர்களுக்கு விற்பனைசெய்த கடத்தல் கோஷ்டிஒன்றை பொலிசார் கைதுசெய்தனர்.

இக்கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட இச் சோடி கிளிகள் பராகுவாவிலுள்ள மிருகக் காட்சி சாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (சி)

### கொரியக் கடலில்
## அமெரிக்கா, தென்கொரியா பாரிய யுத்த ஒத்திகை!

சியோல், ஏப். 2

தென்கொரியாவின் கிழக்கு கடற்பிரதேசத்தில் அமெரிக்காவும்தென்கொரியாவும் இணைந்து ஆயிரக்கணக்கான கடற்படைவீரர்களுடன் நவீனகடற்படை கருவிகள் துணையுடன் கடற்படை யுத்த பயிற்சி ஒத்திகை ஒன்றை நடாத்தி வருகின்றன.

கடந்த மூன்று தினங்களாக இடம்பெறும் இவ்ஒத்திகைப் பயிற்சியில் ஐயாயிரம் அமெரிக்க கடற்படையினரும் தென்கொரியாவின் மூவாயிரம் கடற்படையினரும் பலவித பயிற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இப்பயிற்சியில் விமானம் தாங்கி கப்பல்களும்: நீர்மூழ்கிக்கப்பல்களும், ஹெலிகொப்டர்களுடன் பீரங்கிக் கப்பல்களும் ஈடுபடுத்தப்பட்டுபயிற்சிகள் நடைபெறுகின்றன. (சி)

## அரங்கிசை

உடுவில், வியாழன்

அளவெட்டி கொலிஜ்வியூ அரங்கில் மாதாந்தம் நடைபெற்றுவரும் அரங்கிசை தொடர் நிகழ்ச்சியில் ஏப்ரல் 4-ம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இசையாசிரியர் சங்கீதபூஷணம் திலகநாயகம் போல் இன்னிசை நடைபெறும்.

கும்பழாவளைக்கருகில் உள்ள கலையகத்தில் இவ்விசை நிகழ்ச்சி நடைபெறும். (சி)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

[வவனியா நிருபர்]

வவனியா மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது கால்களை இழந்த இருவருக்கு முச்சக்கரவண்டிகளை இலங்கை வங்கியினர் அன்பளிப்பாக வழங்கவுளனர்.

இதுதொடர்பான வைபவம் எதிர்வரும் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன், வடபகுதி பிராந்திய வங்கி முகாமையாளர் திரு. கே. துரைராஜரட்ணம் ஆகியோரும் ஏனைய உயர் அதிகாரிகள் பலரும் இந்த வைபவத்தில் கலந்துகொள்ளவுள்ளர்.

## மக்கள் வெளியேற்றம்

(அச்சுவேலி நிருபர்)

வசாவிளான், சுந்தரபுரம், ஒட்டகப்புலம் பகுதிகளில் இருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் புத்தூர் நிலாவரைப் பகுதியிலுள்ள அரசாங்க திணைக்களங்களின் கட்டடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வசாவிளான், சுந்தரபுரம், ஒட்டகப்புலம் பகுதியிலிருந்து பலாலி வசாவிளான் இராணுவ முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கையால் பெருமளவு குடும்பங்கள் அகதிகளாக வெளியேறிஉள்ளன.

## தபாலதிபர் இடமாற்றம்

பண்டத்தரிப்பு, வியா.

சங்கானை தபால் நிலைய அதிபர் இ. காசிராஜலிங்கம் முருங்கன் தபால் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு வாழைச்சேனை தபால் நிலைய அதிபர் திரு. மு. கார்த்திகேசு இடமாற்றம் பெற்றுள்ளார். (சி)

## அகதிகள் நிவாரணம்

மன்னுர், வியாழன்

மன்னுர் மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்டு தற்சமயம் அகதிகளாயிருக்கும் திரு கேதீஸ்வரம் பெரிய நாவற்குளம்,நாகதாழ்வு நிலாசனை மக்களுக்கு 2 வார திற்கான உலர்ந்த உணவுப் பொருட்களை மன்னுர் மாவட்ட அரச அதிபர் ஜனுப் எம் எம். மக்பூலின் பணிப்பின் பேரில் தலைமைப்பீட உதவி அரசஅதிபர் திரு.எம்.சி அருந்தவச்செல்வம் மன்னுர் பிரிவு உதவிஅரசாங்க அதிபர் வி. சண்முகநாதன்அவர்கள் வழங்கினுர்கள்.

விநியோகத்தை பெரிய நாவற்குளம் கிராமசேவையாளர் திரு.ஐ.எம். லெம்பேட் பொறுப்பாக செய்தார். அகதிகளின் வீடுகளின் சேதங்களும் மதிப்பீடுசெய்யப்பட்டு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

### பாதுகாப்புத் தேடி
## மக்கள் உடமைகளுடன் செல்கின்ருர்கள்

பலாலி, வியா

குரும்பசிட்டி, குப்ளான் ஊரங்குளை பகுதியில் மக்கள் வெளியேறுகிருர்கள்.

வெளியேறும் மக்கள் சிலர் தமது உடமைகள் சகலதையும் உழவுயந்திரம், வண்டில் மூலம் ஏற்றிச் செல்கிருர்கள். குறிப்பாக குரும்பசிட்டிப் பகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் தமது உடமைகளை எடுக்கமுடியாத நிலையில் இருக்கிருர்கள். குரும்பசிட்டி பகுதிக்கு அண்மித்த இராணுவம் நிலைகொண்டிருப்பதால் அப்பகுதி மக்கள் அங்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சென்ற வாரம் அப்பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதத்தையடுத்து குரும்பசிட்டி குப்பிளான் ஊரங்குளைபகுதிக்குமின் சாரம்முற்ருகத் தடைப்பட்டுள்ளது. கிராமங்கள் இருளில் மூழ்கியுள்ளது. அங்கு சென்று மின்கம்பிகளைப் பொருத்தி திருத்த வேலைகளை செய்வதற்கு மின்ஊழியர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### மணிவாக்கு

கருணைக்காக ஏங்க நேரும்போது இறைவனின் எல்லையற்ற கருணையில் நாம் நம்பிக்கை கொள்வது மிகவும் எளிதாகவுள்ளது. அதேசமயம் இறைவனின் எல்லையற்ற நீதியைப் பற்றியும் நாம் மறந்துவிடலாகாது.

—பி. ஆர். ஹேடன்

## நமது நோக்கு

# தொலைபேசித் துண்டிப்பும் தொடரும் துன்பங்களும்

இந்திய அரசு இலங்கை இனப்பிரச்னையில் சுமுகத் தீர்வொன்றினை உருவாக்கித் தருவதற்கான நடுவர் முயற்சியில் மீண்டும் ஈடுபடப்போவதாக அறிவித்து, அதன்படி சில காரியங்களை மேற்கொள்ளவும் கடந்த வாரம் ஆரம்பித்திருந்தது தெரிந்ததே.

ஏற்கனவே இந்தியா விதித்திருந்த நிபந்தனைகளை இலங்கை அரசு முழுமையாக இல்லாவிடினும் ஓரளவாகிலும் செயல்படுத்தக் கூடும் என்ற அறிகுறிகள் தென்பட்டதையடுத்தே நடுவர் முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன என்பது வெளிப்படை. அந்த வகையில், யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த எரிபொருள் தடையைத் தளர்த்துவதற்கான தீர்மானம்ஒன்றைஇலங்கை மந்திரிசபை நிறைவேற்றி செயல்படுத்த முனைந்தது. அந்தச் செயல்பாட்டுமுறை இங்குள்ள மக்களுக்கு ஏற்புடையதாய் இல்லாமையால் இன்னும் நடைமுறைப் படுதப்படவில்லை.

மேலும் இராணுவ தாக்குதல்களை நிறுத்தவேண்டுமென இந்தியஅரசு விடுத்த வேண்டுகோளும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக பொதுமக்கள் வாழும் இடங்கள்மீது நடத்தப்படும் ராணுவத்தாக்குதல்கள், அத்துமீறல்கள் நிறுத்தப்படவில்லை.

எரிபொருள்தடையால் ஏற்பட்டுள்ள கஷ்டம் ஒரு புறமிருக்க, ராணுவ நடவடிக்கைகளால் மக்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகி வருகிறார்கள்.

யாழ். குடாநாட்டில் நடைபெறும் சம்பவங்களும், அவைகளால் ஏற்படும் விளைவுகளும் இங்குள்ள மக்களுக்குத்தான் தெரியும்.

கொழும்பிலுள்ளவர்களுக்கு எதுவும் சரியாகத் தெரியாது. அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைமீது நடத்தப்பட்டுள்ள ஷெல் தாக்குதல்பற்றி கொழும்புக்கு உடனடியாக சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஏற்கனவே கொழும்புடனான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. குடாநாட்டுக்குள்ளேயே தொலைபேசித் தொடர்புகள் அன்றைய தினம் துண்டிக்கப்பட்டுவிட்டன. இன்னமும் அது சீர் செய்யப்படவில்லை.

இங்கு இடம்பெறும் சம்பவங்கள் பற்றிய உண்மை நிலையை வெளிஉலகம் உடனுக்குடன் அறிந்துகொள்ள முடியாத நிலையை இது உருவாக்கியுள்ளது. அரசபடைகளின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு இதுமேலும் ஊக்கமளிக்கும் செயல் என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

எனவே இந்திய அரசு தனது நடுவர் முயற்சியை தொடர்வதுபற்றி மீண்டும் தயங்குவதாக தகவல்கள் வருவதில் ஆச்சரியமில்லை.

போதனா வைத்தியசாலை மீதான தாக்குதல் தொடர்பாக ஐலன்ட் பத்திரிகை கடந்த புதனன்று எழுதிய தலையங்கத்தில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான தொலைபேசி துண்டிக்கப்பட்டிருப்பது பற்றி விமர்சிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

''யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான நேரடித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதும் யாழ்ப்பாண பொது ஆஸ்பத்திரியின் பிரச்னைகளை அதிகரித்துள்ளது. வைத்தியநிலையங்கள் வெளிஇடங்களுடன் இடைவிடாது தொடர்புகள் வைத்துக்கொள்வது அவசியம். இன்று இந்நிலை இங்கு இல்லை. கொழும்பிலுள்ள மேலதிகாரிகளுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நேரடித்தொடர்பு வைத்திருப்பது இரண்டு காரணங்களுக்காக அவசியம்.

வைத்தியசாலைக்கு மருத்துவத்தேவைகள் ஏற்படுவதும், அவைகள் பற்றி தலைநகரிலுள்ள உரிய முகவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டியதும் ஒன்று. மற்றது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான தொடர்புகள் இல்லாதிருப்பதானது, மேலிடத்துடனான உறவுகளை உள்ளடக்கிய ஸ்தாபனரீதியான ஒழுங்குகளை சீர்குலைத்துவிடும் என்பதாகும் இது நம்பிக்கையீனத்தையே வளர்க்கும். இப்போதைய நிலையில் இது எமக்குத் தேவைதானா?''

கொழும்புடனானதொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதன் விளைவுகளை மேற்கண்டகருத்து சரியாகஎடுத்துக் காட்டும்.

இம்மாதிரி நிலைமையை வைத்துக்கொண்டு ராணுவ நடவடிக்கையையும் கைவிடாமல் தொடர்வதாயின் 'ஐலன்ட்' குறிப்பிடுவது போல் அவநம்பிக்கை யாருக்குத்தான் ஏற்படாது?

இந்தச் சூழ்நிலையில் இந்தியா நடுவர் பணியைத் தொடரத்தான் முடியுமா?

எனவே குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கி தொலைபேசித் துண்டிப்பையும் சீராக்கி இந்தியாவின் நல்லெண்ணப்பணி தொடர்வதற்கு இலங்கை வழிவிடவேண்டும். இது இனியும் சாத்தியமில்லையெனக் காணின் இந்தியா தனது நடுவர் முயற்சியைக்கைவிட்டு மாற்று நிலைப்பாடொன்றை அறிவிக்கவேண்டும்.

இன்றைய நிலை நீடிக்குமானால் தமிழ்ப் பகுதிகளில் அப்பாவிப்பொது மக்களே இல்லையென்ற நிலை உருவாகிவிடும்.

உலக அரசியல்

அவதானி

# போர் தவிர்ந்த பூவுலகம்?

## ஆயுதக் கட்டுப்பாடு பற்றி இரு விசித்திர யாத்திரைகள்!

## பாகிஸ்தான் குண்டில் பெரிதும் தங்கியிருக்கும்

## ஆசியப் பாதுகாப்பு!

### கடந்தகால யுத்தங்கள்

முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்கள் ஐரோப்பாவிலேயே ஆரம்பமானவை. கைசரையும், ஹிட்லரையும் அடக்கி ஒடுக்க வேண்டுமென்று கங்கணம் கட்டியது பிரிட்டன். முதலாவது யுத்தத்தில் கைசர் மண் கவ்வினார். அதன் பலனாக ஹிட்லர் உருவானார். 20 வருடங்களில் மிகப்பயரங்கரமான கொடிய யுத்தம் உலகெங்கிலும் பரவியது. ஆசியாவில் ஜப்பான் நடத்திய சாதனைகளும் அவற்றை அமெரிக்கா அணுகுண்டின் துணையுடன் அடக்கியதும், போர் முடிந்தது.

### இன்றையநிலை

ஐரோப்பா— குறிப்பாக பிரிட்டிஷ் — ஏகாதிபத்தியம் அன்று தலைதூக்கியிருந்த நிலை போரை மட்டுப்படுத்தும் நிலையில் இருந்தது. மேற்கில் ஹிட்லரும், கிழக்கில் ஜப்பானும் தோல்விகண்டநிலையில் போர் முடிந்தது.

இன்று சுமார் 50 வருடங்களுக்குப் பின் உலகில் எந்த நாட்டிலும் நிம்மதியான சமாதான வாழ்வில்லை. மூன்றாவது உலக யுத்தம் தோன்றாவிட்டாலும் அரசியல் போட்டியும் பூசல்களும் மிக மோசமான நிலையில் வளர்ந்துவருவதால் எந்நேரமும், எங்காவது போர் வெடிக்குமென்று நினைப்பது முட்டாள்தனமல்ல.

கண்டத்துக்குக் கண்டம், நாட்டுக்கு நாடு வேறுபட்ட முரண்பாடுகள் இருந்தபோதும், இவை அனைத்துக்கும் இன்று முதன்மை எதிரியாகக் கருதப்படும், அணுஆயுதங்களைக் கட்டுப்படுத்தி, ஒழிப்பதிலேயே போர் தவிர்ந்த உலகம் பெரிதும் தங்கியிருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஸ்தமித்ததும், இன்று அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தம் தம் ஏகாதிபத்தியப் பிடிப்பை உலகனைத்திலும விதைத்திருக்கின்றன. எனவே ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கநாடுகள் அனைதிலும் போரை உருவாக்கும் போட்டிகள் பயங்கரநிலையில் உள.

### இலங்கை

இதற்கு உதாரணமாக எமது நாடே முன்னிற்கிறது. இன்று இனப்பிரச்னையென்று ஊரும் உலகமும் கூறிவரும்; தமிழர் உரிமைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாகி இவ்வளவுகாலம், இவ்வளவு அழிவில் தொடர்வதற்கு காரணம் என்ன? கெரில்லா யுத்தம் என்ற போர்முறை இலங்கைக்குப் புதிதானது. தமிழ்ப் போராளிகளின் போர்த்திறமை அத்துடன் இணைந்ததால் மக்கள் ஆசி என்று பெருமைப்படும் ஒரு நாடு, அந்நாட்டின் ஒருபகுதியிலே எழுந்த போரை முறியடிக்க முடியாது தவிப்பதும், அதற்காக வெளிநாட்டு ஆயுத உதவி, அதன் பின்னணியில் உள்ள அரசியல் கோட்பாடும்- எந்தச் சிறு நாடும் சுதந்திரமாக வாழமுடியாத நிலையைக் குறிக்கிறது. பணத்தால் ஆயுத உதவியால் பெரிய சிறிய நாடுகள் அடிமைப்படுத்தும் ஏகாதிபத்தியம் இன்றைய புதுமை.

இலங்கை அரசை பாகிஸ்தான் கட்டி அணைப்பது எதற்காக? நேசநாடுகள் என்பதின் அர்த்தம் விகடமானது. உன்னுடைய எதிரி யார்? என்னுடைய எதிரியும் அவரே! எனவே நாமிருவரும் இணைபிரியா நண்பர்கள். ஜனநாயக (சர்வாதிகார)சிவில் (ராணுவ) ஆட்சியில் இதுவே இன்றைய நட்பு நாடுகளின் சித்தாந்தம். இத்தகைய கருத்தில் உருவானவையே நேட்டா வார்சோ போன்ற சர்வதேச யுத்த ஒப்பந்தங்கள்.

மூன்றாம் உலக நாடுகள் இவற்றை முறியடிப்பது எப்போ? எங்கே?

### இரு முரண்பட்ட பயணங்கள்

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் இலேசான பெண்

(5-ம் பக்கம் பார்க்க)

## புவி இன்பங்கள் நல்கிடும் தேவி

சங்கரத்தைப் பதியில் உறைந்து
சஞ்சலம் நீக்கிடும் தேவி
பொங்கி ஆடும் அரவின் கீழ்
புன்னகையோடுறையும் தேவி
சிங்க மிசையமர்ந்து வந்தே
சீர்கள் நல்கிடும் தேவி
மங்கையர் போற்றிடுந்தேவி
மகிழ்வெலாம் நல்குந்தேவி

பத்திரகாளி நாமங்கொண்டமர்ந்து
பக்தர்க்கருளுந்தேவி
சுத்த சக்தி வடிவான தேவி
சுப்ரமணியன் போரிலுதித்ததேவி
சித்திகள் பல நல்கி அருளும்
சிவன் மனையாளான தேவி
புத்தி, பலம், செல்வம், என்னும்
புவி இன்பங்கள் நல்கிடும் தேவி.

(நல்கிடும்)

சி. சபாநாதன்.

## அம்மா போற்றி

பாரெலாம் புகழ்படைத்த அம்மா போற்றி
பார்வதியாய்நின்று பாலகரைக் காப்பாய் போற்றி
பவ வினைகளை மாற்றுவாய் போற்றி
பாதுகாத்து அருள்புரியும் அரசியே போற்றி

தக்கன் வேள்வியை தகர்த்தாய் போற்றி
தமிழர்கள் துயர்துடைப்பாய் போற்றி
தவஞான சொரூபினியே போற்றி
தரணியெல்லாம் காத்திடும் சக்தி பத்திரகாளியே
போற்றி போற்றி!

— கு. சிவனேஸ்வரன்.

(சங்கரத்தை பத்திரகாளியம்பாள் இன்று 3ந் திகதி கொடியேற்றமும், 12ம் திகதி தேர் உற்சவம் நடைபெறும்)

## வெள்ளிச்சிந்தனை பெருந்திருவிழா 2

சைவாலயங்களில் மகோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா நடைபெறும் காலத்தில் அங்குள்ள எல்லா மூர்த்திகளுக்கும் விழா நிகழும். சிவாலயங்களில் விநாயகர் முதல் சண்டேஸ்வரர் வரையிலான சகல மூர்த்திகளுக்கும் திருவிழா நடைபெறுவதை அவதானிக்கலாம். இவ்வாறு மூர்த்திகளுக்குத் திருவிழா நடைபெறுவதோடு இந்திரன் சூரியன், அக்கினி, வருணன் வாயு முதலிய தேவர்கள் மகிழும் வகையிலும் பல செயல்கள் நடைபெறும் இந்த அடிப்படையில் சிவனடியார், குருமார், ஆலயக் கடமைகளைச் செய்யும் வேலையாட்கள் ஆகியவர்கள் திருப்தியடையவும் மகிழ்ச்சியுறவும் கூடியவகையில் மகேஸ்வர பூசை சம்பாவனை, சம்பளம் என்பவற்றை மனத்திருப்தியுடன் வழங்குவதோடு ஏழைகள் அங்கவீனர்களுக்கும் அன்னதானம் முதலியன செய்தல் வேண்டும்.

இறைவன் ஆலயத்தில்உள்ள மூர்த்தத்தில் மட்டும் இருக்கின்றான் என்பதன்றி எல்லா உயிர்களிடத்தும் இருக்கின்றான் என்பதன் அடிப்படையில் அந்த அந்த உயிர் நீதியின் அடிப்படையில் இன்புறக்கூடியதாகச் செயற்படுதல் ஆலயத் திருக்காலத்தின் விசேட கடப்பாடாகும். ஆலயத்திருவிழாக் காலத்தில் இவ்வாறு செயற்படப்பழகுபவர் காலகதியில் எல்லா உயிரிலும் இறைவனைக் காணத்தக்க தகுதியைப் பெறுதல் கூடும்.

ஆலயத்திருவிழாவை ஒட்டித் திருவிழாச் செய்பவர் செய்விக்கும் நிர்வாகிகள் குருமார் முதலியோர் தெய்வசிந்தை, அடியார் விசுவாசம் சிவாகமங்களில் சிரத்தை முதலியன மிக்கவர்களாய் செயற்படப் பழகுவதுடன் தெய்வத்துக்கும்தமக்குமுள்ள தொடர்பை வலுப்படுத்தத் திருவிழாக் காலத்தைப் பெரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவேண்டும். இப்படியன்றித் தங்கள் செல்வாக்கு அதிகாரம் தலைமை முதலியவற்றைப் பாதுகாக்கும் சமூக வைபவமாகக் கருதலாகாது. திருவிழாக்களில் தூய்மைகள் பேணப்படும்போதே ஆலயத் திருவிழாக்களைத் தரிசித்தல் மண்ணில் மனிதராய்ப்பிறந்தார் பெறத்தக்க பெரும் பயன் என்ற கருத்து உண்மையாய் இருக்கும்.

மலிவிழா வீதி மடநல்லார்
மாமயிலைக்
கலிவிழாக் கண்டான்
கபாலிச்சரம் அமர்ந்தான்
பலிவிழாப் பாடல் செய்
பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே
போதியோ பூம்பாவாய்.
—திருஞானசம்பந்த
சுவாமிகள்.

— அருளாளன்

## கடைசிநேர வரிவிளம்பரம்

விற்பனைக்கு

Nallur Farm Centre பேட்டு குஞ்சுகள், கறுப்பு சிவப்பு சேவற் குஞ்சுகள் 10-04-1987 விநியோகிக்கப்படும் உடன் பதிவு செய்யவும் C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19. முருகேசர் ஒழுங்கை நல்லூர்.

(சி 8386)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னையா வீரசிங்கம்

அன்னைமடியில்; 21- 05- 1927.

ஆண்டவன் அடியில்: 15- 3- 1986.

தனித்தொரு மகனைத் தோன்றி தளர்விலா கடும் உழைப்பால் உயர்ந்தனை, பலரும் போற்ற பெற்ற நும் செல்வத்தாலே உற்றவர்க்குதவி செய்து தேடினை நண்பர் கோடி பெற்ற உன் சேய்களுக்காய் பொன்னோடுபுவியும் சேர்த்து கடல் தொழில் கருவியோடு கலைகளும் கற்றுய்வித்தாய், ஆண்டொன்று சென்றதையா ஐயா நாம் உனையிழந்து ஈண்டு இங்கு எம்குலத்தில் வந்து நீர் தோன்றி நாங்கள் மாண்டுடல் மடியும் வரை மதிப்புடன் வாழவைப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாரந்தனை வடக்கு, தம்பாட்டி.

(சி 8381)


## மிது வீடியோ மூவிசாரின் புதிய வெளியீடுகள்

1. ★ சிரஞ்சீவி ★ ராதா ★ சுஹாசினி நடித்த **"ராட்சஷன்"** (ஒறிஜினல்)
2. ★ மோகன் ★ சுஹாசினி நடித்த **ஆனந்த ஆராதனை** (ஒறிஜினல்)
3. ★ ராஜேஷ் ★ ரேவதி நடித்த **இலங்கேஸ்வரன்** (ஒறிஜினல்)

சிறந்த வீடியோ படிப்பிடிப்புகளுக்கு இன்று முன்னணி வகிப்பவர்கள்:

**மிது வீடியோ மூவிஸ்,**
பிரதான வீதி, சித்தன்கேணி

(ஏ 3822)


## போர் தவிர்ந்த பூவுலகம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணல்ல. இன்று பன்னிரண்டு வருடங்களுக்குப் பின் மாஸ்கோ செல்லும் பிரிட்டிஷ் பிரதமர் அவர். மூன்றுவது தடவை பிரதமராக வரும் வாய்ப்பு சற்றே மிளிர, இந்த யாத்திரையில் அடியெடுத்திருக்கிறார். அமெரிக்காவின் அரசியல் கட்சிகளின் அடிப்படையினை பிரிட்டனில் உருவாக்க முயல்கின்றார் கொள்கையில் உறுதிகொண்ட இப் பெண்மணி.

இவருடைய அரசியல் எதிரி, தொழிற்கட்சித் தலைவர் நீல்கினனெக். இதேவேளையில் இவர் அமெரிக்க அதிபரைச் சந்திக்க, அமெரிக்க அரசுடன் வாதாட வாஷிங்டன் சென்றிருக்கிறார். அணு ஆயுதங்கள் எதனையும் நிபந்தனையின்றி அற்றுப்பட வேண்டுமென்பதே இவருடைய தீவிரக் கொள்கை.

### வேறுபட்ட கொள்கைகள்

திருமதி தாட்சர் சோவியத்தின் இன்றைய திட்டத்தை- நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்ற கருத்தை, அலசி சில மாற்றங்கள் கொண்டுவரும் பணியில் திரு. கொர்பச்சோவுடன் காரசாரமான கருத்து வித்தியாசங்களை விளாசித்தள்ளுகிறார். ஆயுதபலம் சமனாக இருந்தாலொழிய போர்நிறுத்தம் சாத்தியமில்லை என்ற பண்டைய கருத்து இன்றைய இரும்புப் பெண்ணின் திடமான கருத்து- பழைய ஏற்பாடு இது.

எதிர்க்கட்சித் தலைவர் நீல் னனெக் எவ்வித நிபந்தனையுமின்றி, அமெரிக்கா அமைத்திருக்கும் ஏவுகணைகள் அனைத்தும் பிரிட்டனிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று வாதாடுகிறார்- புதிய ஏற்பாடு இது.

### அமெரிக்காவே முதலாளி

அமெரிக்க மக்கள் விரும்பாத நட்சத்திரப் போரில் பிடிவாதமாக இருக்கும் றீகன் எஞ்சியிருக்கும் இருவருட ஆட்சியில் எவ்வாறு நடந்து கொள்வார்?

இதன்விடையிலேயே ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவிதி தங்கியிருக்கிறது. வறுமையும், கடன்பட்ட வங்குரோட் ஆட்சியுமே இந்த நாடுகளின் கொந்தளிப்பின் முக்கிய காரணம் இவற்றைப் பயன்படுத்தி. ஆயுத விற்பனை, முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கை, போரில் ஐரோப்பிய நிறுவத்திற்கு ஆதரவு — இவை அமெரிக்காவின் இன்றைய கொள்கை.

### பாகிஸ்தான்குண்டு

ஆசியாவை குறிப்பாக தெற்காசிய நாடுகள் இந்துசமுத்திர நாடுகளின் — இந்தியா போன்ற பெரிய நாடுகளினை நிலைகுலைக்கவல்ல அணுஆயுத உற்பத்தி செய்ய பாகிஸ்தானுக்கு மறைமுகமாக உதவ வல்லஇராணுவ,நிதிஉதவிகளை கடந்த ஆறு வருடங்களாக அமெரிக்கா உதவுகிறது. இது தொடரக்கூடாது என காங்கிரஸ் எதிர்க்கிறது. இதனல் இந்தியாவுக்கு அபாயம் என்பதை உணருகிறது. ஆப்கான் போரை சாட்டாக வைத்து, இவ்வித உதவியில் பிடிவாதமாகிறார் றீகன்.

பாகிஸ்தான் பஞ்சாப்மூலம் இந்தியாவை நிலைகுலைத்தால், இஸ்லாமிய பாகிஸ்தானைப் போல் இலங்கையும் பௌத்த (மரபு) நாடாகலாம் என்ற அடிப்படைக் கருத்தில் நாடுகளில் மட்டுமல்ல, நாடுகளுக்கிடையேயும் பிரிவினை ஏற்படுத்தி, வர்த்தகத்தில் ஆயுத விற்பனையில் உலகாள முனைகிறது அமெரிக்கா.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி பூபதி அம்மா பொன்னம்பலம் (நடேசு)

எங்கள் அன்பின் திருவுருவே, பண்பின் உறைவிடமே, பாச மலரே, கள்ளமில்லா வெள்ளையுள்ளம் கொண்டவரே உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா தீபமாய் என்றும் ஒளி வீசுதம்மா இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். 3- 4- 87 வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


பிள்ளைகள், மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

"சொர்ண வடலி", கொக்குவில் மேற்கு கொக்குவில்.

(சி- 8390)


LIDO
From Today
Daily at 10-30 a. m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 4-30, 6-30 p. m.
Alfred Hitchcocks
James Stewart
in
Vertigo
Colour! Suspense!
Excitement
(அல்பிரட் கிச்சொக்கின் மர்மப் படம்)


நன்றி—கல்கி

## இசை மாலை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பரியோவான் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினரால் நாளை 4ம் தேதி நடாத்தப்படவிருந்த இசை மாலை இன்றை சூழ்நிலை காரணமாக மே மாதம் 9ம் தேதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

## யாழ். போதனா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதுடன் அப்பகுதிகளில் வாழும் வைத்தியர்களின் உதவியுடன் அவசரகால சிகிச்சைகள் செய்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளது.

அவசர காலத்தில் தேவைப்படும் சில மருந்து வகைகளின், உபகரணங்களின் பட்டியல் தேவைப்படுவோர் யாழ். வைத்திய சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ். போதனா வைத்திய சங்கத் தலைவர் திரு. ந. சிவராசா அறிவித்துள்ளார்.

## நோயாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் அச்சமடைந்த சாரதி அம்புலன்ஸை வேகமாகச் செலுத்திச் சென்ற பொழுது அம்புலன்ஸ் வண்டியைநோக்கி ஹெலி துரத்தித் துரத்தி சுட்டது.

தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதலினல் பீதியடைந்த சாரதி அம்புலன்ஸ் வண்டியை செலுத்த முடியாது இடை வழியில் நிறுத்தினர். அம்புலன்ஸ்வண்டியின்மட்டத்திற்கு பதிந்து வந்த ஹெலிகாப்டர் வண்டியை நோக்கிச் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதுடன் தொடர்ந்து குண்டுத் தாக்குதலையும் நடத்தியதினல் அம்புலன்ஸ் வண்டி வெடித்து சிதறியதினல் சாரதியும் நான்கு நோயாளர்களும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அம்புலன்ஸ்வண்டி முற்றாக எரிந்து சாம்பரானது.

இவ் வண்டியில் பயணம் செய்த மந்திகை ஆஸ்பத்திரி ஆண் தாதி ஒருவரும் மற்றுமிருவரும் வண்டியை நோக்கி ஹெலிதாக்கத் தொடங்கியதும் சாதுரியமாக குதித்து சிறு காயங்களுடன் உயிர் பிழைத்துள்ளனர்.

இவ்வண்டியில் வந்த சிவா என்பவர் ஹெலி தாக்க ஆரம்பித்த பொழுது வண்டியிலிருந்து இறங்கி ஓடுகையில் அவரை நோக்கி ஹெலிகொப்டரிலிருந்து 50 ஹெலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனல் காயமடைந்த இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

தொடர்ந்து ஒரு மணித்தியாலயம் வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டதினல் இறந்தவர்களின் சடலங்கள் எரிந்த நிலையிலேயே மீட்கப்பட்டன.

நேற்று நண்பகல் வரை சம்பவம் நடந்த இடத்தில் அம்புலன்ஸ் வண்டி எரிந்துகொண்டேயிருந்தது.

(அச்சு-நிரு-ஒ)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் அம்பத்தாடி ஞானவைரவர் சுவாமி ஆலய குடமுழுக்கு விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

## தமிழீழ விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"இராணுவத்தின் விஸ்தரிப்பு முயற்சிகளை கட்டுப்படுத்தி, இராணுவ இன ஒழிப்புக்களை முறியடித்து விரட்டியடிப்பதன் முதற்படியாக யாழ். கோட்டை இராணுவ முகாமின் அருகேயுள்ள பொலிஸ் விடுதி இராணுவ முகாம் கடந்த மாதம் 23ம் திகதி அன்று முற்றுகையிடப்பட்டு முறியடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்துவல்வை மலியத்தனை மினி இராணுவ முகாம் நேற்றுஅதிகாலை 1 மணியளவில் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டது. மிகக்கடுமையான உக்கிர மோதலின் பின் இராணுவமுகாம்எமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து இராணுவ முகாமிலிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### ஹெலிகொப்டர் சேதம்

"மினிமுகாம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வல்வை இராணுவ முகாமின் மீதான தாக்குதலில் வல்வை இராணுவமுகாம் பலத்த சேதத்திற்குள்ளானது. இதே நேரம்சிறிலங்காவின் விமானப்படை இராணுவமுகாமிற்கு உதவியாக தாக்குதல் நடத்திய போதும் எமது விமான எதிர்ப்புஆயுதங்களால் நடாத்தப்பட்ட எதிர் தாக்குதலில் ஹெலிகொப்டர் ஒன்று சேதமடைந்தது.

### வீரமரணம்

"பெருந்தொகையான இராணுவத்தினர் இவ் அதிரடியுத்தத்தில் கொல்லப்பட்ட அதே சமயம் இவ் இன ஒழிப்பு முகாமகளை முற்றுகையிட்டு முறியடிப்பதற்காக கப்டன் முரளி (சிறீதரன், வல்வெட்டித்துறை, லெப்டினன்ட் பாபு (ரவீந்திரன் - வல்வெட்டித்துறை),செல்லையா (யோகராசா - புத்தூர், பாலச்சந்திரன் (லட்சுமிகரன் - வெத்திலைக்கேணி], விடுதலை (யோகநாதன் - தாளையடி), விந்தன் ஞானகுரு - வல்வெட்டித்துறை) ஆகியோர் இறுதிவரை போராடி வீரமரணமடைந்தனர். மறைந்து போன இப் புனிதப் போராளிகளுக்கு நாம் வீரவணக்கத்தை தெரிவிக்கும் அதேவேளை இன்று இடம் பெறும் இவ்வரலாற்று சாதனைகள் தமிழினத்தின் பூரணவிடிவு வரை தொடரப்படும் இப்போக்கில் புலிகளின் தியாக சரித்திரம்தமிழீழ தேசிய கீதத்தை மௌனமாகப் பாடும் என்பதில் எதுவித ஐயமில்லை.

இப்போரில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாவன. 3ஏ. கே. றைபிள், 1 ஏ. கே. ரக றம்மகசீன் எல் எம் ஜி., 4 றம் மகசீன். ஆயிரக்கணக்கான ரவைகள், ராணுவ கவச உடைகள் ஏனைய இராணுவ தளபாடங்கள் [மா]

## இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 11

# தரை, ஆகாய கடல் தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான தமிழர் பலி!

— யாழ்.ஆயர்

''குண்டுவெடிப்புகள் ஷெல் தாக்குதல்கள் இயந்திரத்துப் பாக்கிச் சத்தங்கள்... இவையெல்லாம் எமக்குத் தினமும் கேட்பவையாகிவிட்டன. நாங்கள் தரையால் கடலால் ஆகாயத்தால் தாக்கப்படுகிறோம். இத்தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான தமிழ்பொது மக்கள் கொல்லப்பட்டோ காயப்பட்டோ உள்ளனர். முருங்கன், செட்டிகுளம், இருதயபுரம், அக்கரைப்பற்று, குறிகாட்டுவான் மண்டை தீவு, இன்னும் பல இடங்களில் தமிழ் சிவிலியன்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். படையினர் நடவடிக்கையில் தமது இல்லங்களைவிட்டுவெளியேறிய ஆயிரக்கணக்கான தமிழர் அரசாங்கத்தால் முறையாகக் கவனிக்கப்படவில்லை...''

[—யாழ். ஆயர் அதிவண. கலாநிதி தியோகுப்பிள்ளையின் உரையிலிருந்து)

### மண்டைதீவில்

ஜூன் 10ம் திகதி 'தூய ஒளி' எனும் படகில் மீன்பிடிப்பதற்காக சென்ற 31 குருநகர் கடற்றொழிலாளர்களில்30பேர் மண்டைதீவுக்கடலில் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். ஒருவர் மட்டுமே உயிர் தப்பினார்.

ஜூன் 12: தமது பூநகர் அகதிமுகாமுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற 19 தமிழ்அகதிகளும் 2 முஸ்லிம்அகதிகளும்திருமலையில் ஊர்காவற்படையினரால் கொலைசெய்யப்பட்டனர் இந்த முகாமிலிருந்த அகதிகள் முன்னர் மட்டக்களப்பில் தஞ்சமடைந்திருந்தனர். ஆயினும் இவர்கள் மீண்டும் திருமலைக்குச்செல்லாவிட்டால் அவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்படுமென பயமுறுத்தப்பட்டதையடுத்தே அவர்கள் பூநகர் அகதிமுகாமுக்கு வந்தனர். சம்பவதினம் இந்த 19 பேரும் கிராமசேவகரொருவரும் குடியேற்ற அதிகாரி ஒருவரும் இருவர் முஸ்லிம்கள்) சேருநுவர சென்று இம் முகாமுக்கான உணவுப் பொருட்களைக்கொண்டுவரும் வழியிலேயே கொல்லப்பட்டனர்.

ஜூன் 20: குருநகரிலிருந்து அகதிகளாக இந்தியா புறப்பட்ட 34 தமிழரின் படகுமீது நாச்சிக்குடாவருகில் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதால் 32பேர் கொல்லப்பட்டனர். இருவர் உயிர்தப்பி நீந்திக் கரைசேந்தனர். பின்னர் கரையில் அடித்து வரப்பட்ட படகிலிருந்து 15 சடலங்கள் மீட்கப்பட்டன. தொடர்ந்து வந்த பல நாட்களில் பலசடலங்கள் உருக்குலைத்த நிலையில் கரைசேர்ந்தன.

அதேதினம் வசாவிளானுக்கருகிலுள்ள தோலகட்டி ஆச்சிரமத்தில் படையினரால் வண. சகோ. வென்சஸ்லஸ் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஜூன் 26ம் திகதி: திருமலை கிராமமான சாம்பல்தீவு'சுற்றி வளைத்துதேடுதல்' நடத்தல்' நடவடிக்கைக்காக பெருமளவு எண்ணிக்கையான படையினர் குறைந்தது 15 தமிழ் சிவிலியன்களைக் கொன்றதுடன் சொத்துக்களுக்கும் தீயிட்டனர்.

இச்சம்பவத்தின்போது சுட்டுச்கொல்லப்பட்ட ஒருவரின் 35 வயது மனைவியொருவரின் வாக்குமூலம்.

"...எனது கணவர் கே... எஸ்...உடனும் எமது நான்கு பிள்ளைகளுடனும் வசித்து வந்தேன். சம்பவதினம் தேடுதல் நடத்தும் படையினரால் வீட்டிலிருந்த கணவர் அழைத்துச் செல்லப்பட்டார். அடுத்தவளவில் அவரைக் கூட்டிச்சென்ற படையினர் கேள்வியெதுவும் இன்றி இன்னும் மூவருடன் சேர்த்து அவரையும் சுட்டுக் கொன்றனர்''

### காட்டிலிருந்து 34 சடலங்கள்

ஜூன் 28ம் திகதி; திருமலையிலுள்ள தம்பலகாமத்தில் காட்டுப் பிரதேசத்திலிருந்து பெண்ணுடையதுட்பட 34 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த 34 பேரும் ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர் எனக்கூறப்பட்டது.

இச்சடலங்கள் யாவும் உள்ளூர் ஆலைச் சொந்தக்காரர் அவரது மனைவி அவரது ஊழியர் ஆகியோரது மன பின்னர் அடையாளம் காணப்பட்டன.

காணமல்போன தனது தாயைக் தேடிச்சென்ற ஆலைச் சொந்தக்காரரின் மகனால் இச் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

ஜூன் 28: பரந்தனில்பாதுகாப்பு படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கோழிப்பண்ணையில் வேலைசெய்துகொண்டிருந்த பண்ணைமுகாமையாளர் உட்பட எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டு மரத்துடன் கட்டப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர் விமானக் குண்டுவீச்சினால் இருவர் கொல்லபட்டனர்.

### கடற்றொழிலாளர் கொலை

ஜூலை 1ம் திகதி மன்னாருகில் பேசாலை கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தோர் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பல டற்றொழிலாளர்கள் மரணமானார்கள்.

ஜூலை 9ம் திகதி; தம்பலகாமத்தில் முள்ளிப்பொத்தானையிலுள்ள தமிழ் குடியேற்றக்கிராமத்தில் துப்பாக்கிகள் வாள்கள் இதர அபாயகர ஆயுதங்கதங்களுடன் புகுந்த ஊர்காவற்படையினர் 3 குழந்தைகள், 5 பெண்கள், 3 ஆண்களைக் கொன்றனர்.

இச் சம்பவத்தின்போது தமது மனைவியையும் பேரப்பிள்ளைகளையும் பறிகொடுத்த ஒருவரின் வாக்குமூலம்.

"சம்பவதினம் மாலை 4 மணியளவில் ஊர்காவல்படையினர் கத்திகள் பொல்லுகள் போன்றவற்றுடன் அங்கு வந்தனர். எனது வீடு நோக்கி ஓடிவந்து கொண்டிருந்த மனைவியை நோக்கி துப்பாக்கி வைத்திருந்தவர் சுடவே அவர் விழுந்து ஸ்தலத்திலேயே மரணமானார். மனைவி தம்முடன் தூக்கி வந்த பேரப்பிள்ளையான சர்மிளாவும் (6 மாதம்) ஸ்தலத்திலேயே மரணமானார்''.

### குடும்பம் கொலை

ஜூலை 13ம் திகதியன்று பாவற்குளத்தில் வசிக்கும் திருமதி. செல்வராசா தேவியின் தாயார், சகோதரர்,

(7-ம் பக்கம் பார்க்க)

---

பிரசுர இல: 1

# மார்பு நோய் சிகிச்சை நிலைய கட்டிட திருத்த வேலைகள்

## மயிலிட்டி, காங்கேசன்துறை

1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி காலை 10-00 மணிவரை மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான சீல் வைத்த கேள்கள் ரூபா 50,000/க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் காலை 10-30 மணிக்குக் கிடைத்த கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

இவ்வேலைகட்கு கேள்விகளை அனுப்பவிரும்புவோர், 1987ம் ஆண்டுஏப்ரல் மாதம் 20ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக திரும்பப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளளிப்பு அற்ற பணமாக ரூபா 25/-மும் யாழ். இலங்கை வங்கியில் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டைக்காட்டிக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை இல | வேலையின் விபரம் |
|---|---|
| 46 | பொறுப்பு மருத்துவரின் (House Office) வதிவிடக்கட்டிட திருத்தவேலை |
| 47 | தாதிகள் வதிவிடக்கட்டிட திருத்தவேலைகளும், வாளி மல கூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதலும் |
| 48 | பிரேதசாலைத் திருத்தங்கள் |
| 49 | நோயாளிகள் தங்குமிடம் முதலாம் இல. கட்டிட (Ward 1) திருத்தவேலையும் வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதலும் |
| 50 | நோயாளிகள் தங்குமிடம் ஆறும் இல கட்டிடத்தின் (Ward 6) கடல்பக்க சுவர்வெளிகளை அடைத்தல். |

இவ்விளம்பரம் பற்றிய மேலதிக விபரங்களைப்பெறவிரும்புவோர் கச்சேரி, பொறியியற்கிளையில் அறிந்து கொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரசாங்க அதிபர், செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு. பதிவுத்தால் மூலம் மெழுகு சீல் வைக்கப்பட்ட கடித உறையில் அனுப்பப்படல் வேண்டும். கேள்விக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் 'மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலைய திருத்தவேலைக்கான கேள்வி வேலை இல...........''என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் இவ்வலுவலகத்தில் குறிப்பிட்ட திகதி அதாவது 21-4-87இன் முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. தபால் மூலம் அனுப்பப்படாத கேள்விகள் யாழ் செயலக அலுவலக உதவியாளர்/நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் உள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாக இடப்படலாம் தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர் அவருடைய கேள்வி என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற அறிவித்தல் கிடைத்த ஒருவாரத் காலத்துக்குள், குறிப்பிட்ட வைப்புப்பணத்தைச் செலுத்துவதுடன், வேலைக்கான ஒப்புதல் பத்திரங்களில் கையெழுத்திடவேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர்கள் ஏற்றுக்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையில் 5% வீதத்தை ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்குப் பிணைப்பணமாக என்னால் பெயர் குறிப்பிடப்படும் வங்கியில் செலுத்துதல் வேண்டும். வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்பட்ட பின் இவ்வைப்புப்பணம் திருப்பி அளிக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளுதல் அவற்றின் பகுதி எதையாவது நிராகத்தரில் அல்லது அவற்றை முற்றாக நிராகரித்தல் என்னும் உரிமைகளும், பிற தீர்மானங்களும் அனைத்தும், இறுதி முடிவுகளும் எடுக்கும் அதிகாரமும் கேள்விச் சபைத்தலைவரையே சார்ந்ததாகும்.

**வை. மு. பஞ்சலிங்கம்,**
யாழ். மாவட்ட செயலாளரும், அரச அதிபரும்,
யாழ். மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1987-03- 1

எ-3905

---

இதோ!

FORTE

ஃபோர்ட்டே
பற்பல வண்ணங்களில் மிளிர்கின்றது



ஃபோர்ட்டே கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக உன்னதமான கறுப்புவெள்ளை போட்டோ பிலிம்களுக்கும் தாள்களுக்கும் உலகப் பிரசித்தி பெற்றது. ஃபோர்ட்டே இப்போது ஃபோர்ட்டேகலர் FR 100 பிலிம்களின் மூலமாக தத்ரூபமான வீண்ணப் படங்களை உங்களுக்கு வழங்குகிறது.




ஃபோர்ட்டேகலர் FR 100 பிலிம்
110.24 Exp. ரூ. 67/50
135 24 Exp. ரூ. 70/-
135.36 Exp. ரூ. 85/-

குறைந்த விலையில் சிறந்த படங்கள்

"விசேட அறிமுக சலுகை 1987 மே மாதம் 31-ம் திகதி வரை செல்லுபடியாகும்."

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஃபோர்ட்டே கலர் FR 100 பிலிமும், மூன்று வித அழகிய வண்ணக் குடைகளிலொன்றை நீங்கள் வெல்ல உங்களுக்கு அரிய வாய்ப்பினைத் தருகிறது. எல்லாப் படப்பிடிப்பு நிலையங்களிலும் கிடைக்கும் கூப்பனைப பூர்த்தி செய்து அத்துடன் ஃபோர்ட்டேபிலிம் பெட்டியின் இருபக்க விளிம்பு மடிப்புகளையும் இணைத்து நைன் ஹார்ட்ஸ், 99, ஸ்டேஸ் ரோட், கொழும்பு 14 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பும் கூப்பன் சீட்டிழுப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படும்.

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஃபோர்ட்டே கலர் FR 100 பிலிமுக்கும் கையடக்கமான ஃபோர்ட்டே ஷொப்பிங் பை ஒன்றை நாடெங்கிலுமுள்ள எந்த ஃபோர்ட்டே விற்பனையாளரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்



பரிசுகள்:
ஆடவருக்கு-வளைந்த கைப்பிடியுள்ள குடைகள்,
மகளிருக்கு-வளைந்த கைப்பிடியுள்ள குடைகள்,
கொல்ப் குடைகள்

நைன்ஹார்ட்ஸ்
(தலைமை அலுவலகம்/இறக்குமதிப் பிரிவு)
99, ஸ்டேஸ் ரோட், கொழும்பு - 14
தொலைபேசி - 32338/549907

METROPOLITAN ADS

Licence No. S/566

# இன்றைய பலன்

மாதம்: பங்குனி
திகதி: 20 [1987-4-3]
கிழமை: வெள்ளி
திதி: பஞ்சமி மு.இவ.ரை
நட்சத்திரம்: ரோகினி
பி.இ வரை

மேடம்: தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாட்டிக் கொள்ள நேரிடும். இன்று நடுநிலைமை நன்று.

இடபம்: மனச்சோர்விற்கும் இடமுண்டு சிறிய விஷபயத்துக்கு இடமேற்படலாம். உடல்நலத்தைப் பேணவும்.

மிதுனம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலே உயர்வுக்கு வழிகாண்பீர்கள் மேலிடத்து உறவு உற்சாகத்தை அளிக்கும். பெரியோர் ஆசியுமுண்டு.

கடகம்: போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள். சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கும். அரசாங்க ஊழியராயின் ஆதரவிற்கு இடமுண்டு.

சிங்கம்; மாதுரு ஆதரவிற்கும் இடமுண்டு. நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். புதிய முயற்சிகளும் கைகூடும்.

கன்னி; பொதுவாக வாழ்க்கையில் நிம்மதி கிடைக்கும். வீட்டிலும் புத்திரர் மகிழ்ச்சியடைவர். தொழிலிலும் வெற்றியுண்டு.

துலாம்: முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும் உள் வீட்டிலேயே உளவு வேலை நடைபெறும். விழிப்புடனிருக்கவும்.

விருச்சிகம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும் காதல் விவகாரம் தலைதூக்கும். சிலருக்கு பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

தனுசு: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். விபத்துக்கும் இடமேற்படும். அவதானம் நன்று.

மகரம்: தந்தை வழிப் பெருமைக்கும் தாராளமாக இடமுண்டு. நீண்ட நாள் கனவு நனவாகும். பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

கும்பம்: விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். நீண்டநாள் பிணக்கு நிவர்த்தியாகும். தொழில் விடயத்திற்கும் நல்ல நாள்.

மீனம்: சிலருக்குப் புதிதாகத் தொழில் கிடைக்கும். சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

திருமலை ரவீந்திர

## இலங்கையில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு சகோதரிகள் ஆகியோரை அங்கு வந்த 3படையினர் கொன்றனர். அயல் வீட்டிலிருந்த இருவரும் அன்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### 50 பேர் கொலை

ஜூலை 13ம் திகதி மன்னாரிலுள்ள அடம்பனில் ராணுவக் குழுவொன்று சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தியது. ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதனுலும் மற்றும் தேடுதல் நடாத்திய இராணுவத்தினராலும் பல முஸ்லிம்கள் உட்பட 50க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

உயிலங்குளத்தில் முஸ்லிம் ஒருவரை மணந்த 36 வயது தமிழ் பெண்ணின் சாட்சியம்

"......எனது கணவர் பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டதால் எனது சகோதரியின் மகன் செல்லத்தம்பி கனகசபையே உயிலங்குளத்தில் தனது சிறு சைக்கிள் திருத்தும் கடை மூலம் எமது ஜீவனோபாயத்திற்கு உதவி வந்தார். ...12ம் திகதி அவர் எமது உறவினர் ஒருவரைப் பார்ப்பதற்காக அடம்பன் சென்று அன்றிரவு அங்கு தங்கினர்.

"13ம் திகதி அடம்பனைச் சுற்றி வளைத்த படையினர் எனது உறவினர், அவரது மனைவி, ஆறு பிள்ளைகள் உட்பட வேறு இருவருடன் சேர்த்து கனகசபையையும் சுட்டுக் கொன்றனா......"

ஜூலை 16ம் திகதி திருமலையிலுள்ள பெருவெளி, மணற்சேனை கிராமங்களை அதிகாலை முற்றுகையிட்ட இராணுவத்தினர் குறைந்தது 14 தமிழரைச் சுட்டுக்கொன்றனர். இவர்களில் அனேகர் அகதிகள். இவர்கள் பெருவெளி அகதி முகாமிலிருந்து பலாத்காரமாக அழைத்து செல்லப்பட்டு சுடப்பட்டனர் இச் சம்பவம் தொடர்பாக மூதூர் நீதிவானினுல் மரண விசாரணை நடாத்தப்பட்டு இது சம்பந்தமான ஆவணங்கள் யாவும் உடனடியாக ஹெலிகொப்டர்மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டன இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதற்கான அறிகுறிகள் இது வரை இல்லை.

இச் சம்பவத்தின் போது தனது கணவனை இழந்த 28 வயது பெண்ணின் வாக்குமூலம்.

"......நானும் எனது கணவனும் எமது 5 பிள்ளைகளுடன் பெருவெளியில் வசித்து வருகின்றோம். சம்பவதினம் காலை 7 மணியளவில் எமது வீட்டிற்கு வந்த படையினர் எனது கணவரை வெளியே இழுத்து தாக்கிய பின்னர் சுட்டுக் கொன்றனர். ...."

### பஸ் பயணிகள் கொலை

ஜூலை 17ம் திகதி முல்லைத்தீவில் அரசுக்குச் சொந்தமான பஸ் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டுவீசித் தாக்கியதில் 10 பயணிகள் பலியாகினர். [தொடரும்]

தொகுப்பு:- ஸேனு

## ஆலயங்களில் புராணபடனம்

சாத்வீகமாக, அமைதியாக கண்ணியமாக, சுதந்திரமாக மக்கள் வாழ்ந்து வந்த நம்பிரதேசத்தில் சென்ற சில ஆண்டுகளாக அசுரத் தன்மையுடைய படைகளால் கொலை, கொள்ளை அக்கிரமம், வஞ்சனைகளுடன் அசுர காண்டம் நடைபெறுகிறது. நம் சமய வரலாறுகளில் புராணங்களில், இதிகாசங்களில் இத்தகைய இழிநிலைகளை கேட்டும் அறிந்தும் இருக்கிறோம். தெய்வீகப் பிரார்த்தனை ஒன்றே இந்நிலையை அசுர பயத்தை நீக்கி எம்மை வழிப்படுத்தும் என்பதை நாம் நன்ருக உணர வேண்டும். குறிப்பாக கந்தபுராணத்தில் இந்திரன் முதலிய தேவர்கள் கொடிய அசுரர்களால் வதைக்கப்பட்டதும், சர்வ சக்தியுடைய முருகப் பெருமானிடம் தங்கட்கு நேரிட்ட இடர்களை தேவர்கள் முறையிட்டதும் முருகன் வேற்படை கொண்டு அசுரர்களை வேருடன் அழித்து தேவர்களுக்கு விமோசனம் அளித்ததும் சிந்திக்கத்தக்க சிறந்த தத்துவங்களாகும் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்று ஒரு தீர்வை எதிர் நோக்கி வரையறை இல்லாதகாலத்தை வீணே போக்கிக் கொண்டிருக்கும் நாம் இந்த அவக்காலத்தைத் தவக்காலமாக்க எமது ஆலயங்களில் புராண படனங்களைப் படித்து தெய்வ அருளை வேண்டிப் பணிந்து நிற்பதே சாலச் சிறந்தத கும்.

இப்போது பங்குனி மாதம் வசந்தகாலம், எப்பொழுதும் நல்லதையே செய்யத் தூண்டும்இனிமையான பருவம் ஆலயங்கள் எங்கனும் மகோற்சவங்கள் தொடர்ந்து நடைபெறும் விழாக் காலம் பங்குனி உத்தரப் பெருந்தினம். சக்தி வடிவாம் அம்பிகைக்குச் சிறப்பான தினம். அன்று கந்தபுராணத்திலுள்ள பார்வதி திருக்கல்யாணப் படனத்தையாவது பூர்த்தி செய்யும் வகையில் அதற்கு முன்னர் ஒரு நாளில் திருக்காப்புடன் புராண படனத்தை ஆரம்பித்து புக்தி பரவசமாக அடியார்கள் கேட்டு எமது இன வீரர்கள் அசுரர்களால் தொடர்ந்தும் இம்சிக்கப்படாமல் பாதுகாப்போம். எமது சுதந்திர, சுபிட்ச தனித்துவ அபிலாஷைகள் நிறைவேறவேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

இணுவை
வி. எஸ். சுப்பிரமணியம்.

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(வவனியா)

சாஸ்திரி, கூழாங்குளம், புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மின்னொளி கரபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 4ம் திகதி மேற்படி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## மெய்வல்லுனர் போட்டி

காரைநகர், வியா.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கழகங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 4-ம், 5-ம் திகளில் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவரத்தினம் கலந்துகொள்வார்கள். போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டு அதிகாரி பி பொன்னுசாமி மேற்கொண்டுள்ளார்.

## தவக்கால நற்சிந்தனை

## சாதனை புரியும் மனத்தின் அடித்தளம்

லட்சியமாக த்தேர்ந்தெடுக்குமுன் நாம் ஒரு நல்ல மன நிலையைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நன்ருகப்பண்படுத்தப்பட்ட நிலத்தில்தான் விவசாயி விதைக்கிருன். நிலம் பண்பட்டிருக்கும் போதுதான் விதை லேசாக வெடித்து வேர்விட ஏதுவாகிறது செடி நன்ருக வளர்கிறது. கட்டாந்தரையில் யாரும் விதைப்பதில்லை.

நிலத்தைப் பண்படுத்துவது போல உற்சாகமான ஒரு மன நிலையை நாம் முதலில்உருவாக்கிக் கொள்ள வேண்டும். இது முடியும் என்றமனநிலை சந்தோஷமாக வாழ்வேன் என்ற தீர்மானம் முடிந்த வரை உதவுவேன் என்ற மனப்போக்கு பெருந்தகையாளனுக நடப்பேன் என்ற உயர் உள்ளம் இவைதான் சாதனை புரியும் மனத்தின் அடித்தளம்.

வாழ்வில் பகலும் உண்டு இரவும் உண்டு ஒளியும் உண்டு நிழலும் உண்டு உற்சாகமும், துக்கமும் வாழ்வின் சக்கரங்கள்

எடுத்தது முடியும் நல்லது நடக்கும் என்ற உற்சாகமான மனநிலையில் நாம் வளரவேண்டும். இத்தவக்காலம் இறைவனுல் கொடுக்கப்பட்ட காலமாகும். நாம் எம்மையே மாற்ற இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

அன்பின்இறைவா நீர்சென்ற இடமெல்லாம் நன்மையேசெய்தீர். உம்மைப் போன்று பிறர் தேவைகளை நாங்களும் கருத்துடன் அறிந்து அவர்களுக்கு உதவி செய்யவும் எப்பொழுதும் நல்லதையே நினைக்கவும், நல்லதையே பேசவும், நல்லதையே செய்யவும் எனக்கு வரம் தாரும்.

சாந்தினி சின்னத்துரை.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்

கொக்குவில மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. 11ம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், திங்கள் கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (ப)

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

சரித்திரப்பிரசித்தி பெற்ற கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்சவம் இன்றைய சூழ்நிலை காரணமாக இவ்வாண்டு அலங்கார உற்சவமாக நடைபெறும். நாளை சனிக்கிழமை தொடக்கம் 15ம் திகதி வரைக்கும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் காலை 8 மணி தொடக்கம் 11-30 மணிக்குள் 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும் உள் வீதியில் அம்பாள் திருஉலாக்காட்சியும் நடைபெறும்.

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்

கொல்லங்கலட்டி சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் நாளை நடைபெறவிருந்த நிறுவனர் நினைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்றைய சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன.

## அரங்கிசை—13

யாழ்ப்பாணம், வெள்

அரங்கிசையின் 13வது நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மாலை அளவெட்டி கும்பழாவளை கலையகத்தில் நடைபெறவுள்ளது.


## ரொபி விற்பனை

பனை அபிவிருத்திச் சபையின் விசேட உற்பத்திகளான பாம்ரோ, பாம் ரீஸ், பனம் ரொபி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்க.

(வியாபாரிகளுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்)

சந்தைப்படுத்தும் பகுதி
பனை அபிவிருத்திச் சபை:

எ-3910

## ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு

ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பிந்தவர்களின் நன்மை கருதி இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படுகிறது.

முழுப்பயிற்சிக்குமான கட்டணம் 200/- மட்டும்.

பயிற்சிநெறி 5-4-1987ல் ஆரம்பமாகிறது.

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
48/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சி-8379

இந் நெருக்கடியான நிலையிலும்
விலைகுறைப்புடன் செயற்படும்
Green Peking Palace R. .S. R.
ஸ்தாபனத்தாருக்கு மக்கள் மத்தியில் ஓரே பரபரப்பு.
தொடர்ந்தும் தங்கள் சிரமங்களை எதிர்பாராது
Lunch parcel 12.50—17.50
Saturday Sunday Beer 30/- Only
(Beer With Cheese Biscuit)

நாடுங்கள்:

**Green Peking Palace**
4th Cross Street,
Jaffna.
[குருநகர் சந்தைக்கு முன்பாக]

Open From 9 a.m–11 p.m

(A 3821)

JAFFNA COLLEGE
TECHNICAL INSTITUTE
VADDUKODDAI.

## மனை நிர்மாண தொழிற்பயிற்சி சான்றிதழ் நெறிகள்

நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் எமது இளைஞர்களுக்கு இலவசபயிற்சி வகுப்புகள் அளிக்கப்படுகின்றன.

மேசன் வேலை
மரவேலை ] 5 மாத பயிற்சி

21 வயதுக்குட்பட்ட சகலரும் விண்ணப்பிக்கலாம். ஒழுங்கான பயிலுநர்க்கு நாளாந்த ஊக்குவிப்புப் படி ரூபா 10/- வழங்கப்படும். உடனே விண்ணப்பித்து நேரில் வரவும்.

பணிப்பாளர்.

(எ-3907)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 3-4-87

## மேலதிக அரச அதிபர்

(ஒட்டுசுட்டான் நிருபர்)
முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக திரு. கே. சண்முகலிங்கம் இம்மாதம் 1ம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

## உணவு முத்திரை நிறுத்தம்: 85 ஆயிரம் கடற்றொழிலாளர் குடும்பங்கள் பெரும் பாதிப்பு!

சுண்டுக்குளி, வியா.
கடல்வலய பாதுகாப்புச் சட்டத்தினல் பாதிக்கப்பட்டு விசேஷ உணவுமுத்திரைகளைப் பெற்றுவந்த வடபகுதியைச் சேர்ந்த சுமார் 85,000 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு கடந்த மார்ச் மாதத்திலிருந்து இவ்வுணவு முத்திரைகள் வழங்கட்படாததினல் அவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

கடல்வலயப் பாதுகாப்புச் சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தி அச்சட்டத்தினல் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அரசு விசேஷ உணவுமுத்திரைகளையும், கடற்றொழிலாளர் அட்டைகளையும் வழங்கிவந்தது. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இவற்றைப் பெற்றுவந்த இக்குடும்பங்களுக்கு கடந்த மார்ச் மாதத்திலிருந்து இதனை வழங்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனல் வடபகுதியிலுள்ள 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து விசேஷ உணவு முத்திரைகளைப்பெற்றுவந்த சுமார் 85,000 பேருக்கு கடந்த பெப்ரவரி மாதத்துடன் முடிவடைந்த உணவு முத்திரைகளுக்குப்பின் கடந்த மார்ச் மாதத்திலிருந்து வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## கடற்றொழிலாளர் வெளியேற்றம்

பலாலி, வியா
மயிலிட்டி, பலாலி ஊறணி, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளிலிருந்து கடற்றொழிலாளர்கள் நாளும் வெளியேறிய வண்ணமுள்ளனர்.

## யுத்த கைதிகளை பார்வையிட பிக்கு தலைமையிலான குழு ஞாயிறன்று யாழ். வரும்

யாழ்ப்பாணம், வெள்ளி
வன்னிப்பகுதி சமாதான குழுத்தலைவரும், வவனியா கண்டி வீதி பிரதம பிக்குவுமான சியம்பல கஸ்பவ விமசார தேரோ தலைமையிலான 40 பேர்கொண்ட குழுஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக்குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளினல் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகள் எட்டுப்பேரையும் சந்திக்கவுள்ளதுடன் அண்மைக்காலத்தில் விமான, ஷெல் தாக்குதலினல் சேதமடைந்த யாழ். வைத்தியசாலை மற்றும் பல இடங்களையும் பார்வையிடவுள்ளனர். (ரா)

## இருவர் காயம்

பலாலி, வியாழன்
குரும்பசிட்டி பகுதியில் 'சென்றி'யில்நிற்கும்இராணுவ சிப்பாய்கள் இன்றுதுப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குப்பிளானை சேர்ந்த நடராசா அன்னப்பிள்ளை (வயது 65) வயிரமுத்து சின்னத்துரை (வயது 60) ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர்.

## அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி
பலாலி இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே காங்கேசன்துறையில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த இராசரத்தினம், செல்வகுமார் (மயூரன், பபி) மல்லாகம், தெல்லிப்பழை, சுன்னுகம் பகுதிகளில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (வா)

## சைக்கிளில் சென்றவர் பலி

பலாலி, வியாழன்
அச்சுவேலி வளலாய் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது ஹெலிகொப்டர் தாழப்பறந்து சுட்டதில் எஸ். தனம் என்பவர் பலியானுர்.

## இன்று

பண்டத்தரிப்பு,நிருபர்.
சங்கரத்தை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 12-ம் திகதியன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

## மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்ற அரச படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி பெருமளவு மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

வல்லை மநசவுசாலைப் பகுதி. உடுப்பிட்டி' புருப்பொறுக்கி தொண்டமனறு பகுதியில் குடியிருந்த மக்கள் பாதுகாப்பு கருதி அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், கரணவாய் மண்டான் உப்புவல்லைப் பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து அன்ரனிப்பிள்ளை

சவரிமுத்து அன்ரனிப்பிள்ளை (ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்) காலமானுர். இவர் றெஜீனுவின் அன்புக் கணவரும், சந்திரா (கனடா), இன்பம் (கனடா) மனேராஜ் (U K), தேவாாஜ் (U K), யோகேஸ், குணராஜ் (Holland), மகேந்திரராஜ் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr. பாக்கியநாதன் (கனடா), ஜேம்ஸ் Accountant (கனடா) ரதினி வதனு, ரஞ்சினி, ஆகியோரின் அன்பு மாமனுரும், நளினி,ரதினி, வதனி, ரஜீவ், ரஜித்தா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 30, 3ம்குறுக்குத்தெருவிலுள்ள அவரது இல்லத்திலிருந்து 4-4-87 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு செஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலைச் சகலரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

(சி 8380) தகவல்: அ. றெஜின (மனைவி)



### ப. நிர்மலன் (ஈஸ்வரன்)

பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த ப. நிர்மலன் 30-3 87 அன்றுஅகாலமரணமானுர். இவர் K. C. பத்மநாபன்; செல்வராணி தம்பதியரின் மூத்த புதல்வனும் புவனேஸ்வரன் (Bonev - பாலா), பிரபாகரன்,தேவகி, ஜனுர்த்தனன், சௌமியா, சோபனு, சத்யா கிருஷ்ண, அனுசூயா, யசோதரா, அமுதசாகரன், ஆகியோரின் அருமை சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றூர் உறவின நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: K. C. பத்மநாதன்
(சி 8391) 6, கன்னுதிட்டி றேட், யாழ்ப்பாணம்.

### மு. திருநாவுக்கரசு

புத்தூரைச் சேர்ந்த முத்துச்சாமி திருநாவுக்கரசு முன்னுள் புத்தூர் ஊராட்சிமன்றத் தலைவர் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னர் புவனேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், நகுலேஸ்வரன் (யாழ். பரியோவான் கல்லூரி) அவர்களின் பிரிய தந்தையும், முத்துச்சாமி அன்னம்மா அவர்களின் அன்பு மகனும், ஆசிரியர் கணேசன் (வசாவிளான் ம ம வித்தியாலயம்) சிற்றம்பலம் (மீசாலை) அவர்களின் சகோதரரும், பாலசுப்பிரமணியம் (சட்டத்தரணி) அவர்களின் சிறிய பிதாவுமாவார், அன்னுரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு புத்தூரில் உள்ள குடும்பமயானத்தில் நடைபெறவுள்ள.

[சி 83?3]

### கந்தையா சற்குருநாதன்

ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்)

திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்டவரும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கந்தையா சற்குருநாதன் (ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர்) காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் அன்புக்கணவரும், திருமதி விஜயலட்சுமி ரவீந்திரன் (கனடா), வெற்றிவேலு (கனடா), சுபேந்திரன் (கனடா), குலேந்திரன் (லண்டன்), திருமதி சத்தியலட்சுமி (கனடா), திருமதி நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமச்சந்திரன் (பெரும் தெருக்கள் திணைக்களம், பளை) ஜெகநாதன் (கனடா),விஜயேந்திரா(உரிமையாளர்எஸ்.பி.எல் எஸ் அன் கொம்பனி) சாந்தி (கனடா), ராஜினி (கனடா) பகீரதி(லண்டன்)ஆகியோரின்அன்புமாமனுரும் திருமதி சௌபாக்கியவதி குணரெத்தினம், காலஞ்சென்ற நடராசா, வெற்றிவேலு, மதியாபரணம், சபாரத்தினம், நீலாயதாட்சி தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னுரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கு. இராமச்சந்திரன், சிவஞானப்பிள்ளையார் கோவிலடி, ஆடியபாதம் வீதி, நல்லூர். [சி 8395]

## மரண அறிவித்தல்

### முருகேசு நாகராசா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வீமன்காமத்தில் வசித்தவருமான முருகேசு நாகராஜா கடந்த வெள்ளிக்கிழமை 27 - 3 - 87 ல் சுவிற்சலாந்தில் காலமானுர். இவர் முருகேசு அன்னம்மாவின் மூத்த புதல்வரும் பத்மலீலாவின் அன்புக்கணவரும் ஜெரஞ்சினி, பாஸ்கர், சுதாகர், தர்மினி ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. மு. ஜெகராஜா திருமதி சி. ஜீவரடணம் திருமதி ப. ராஜேஸ்வரி, சாந்தினிதேவி ரஞ்சன் ஆகியோரின் சகோதருமாவார். அன்னரது ஈமக்கிரிகைகள் 4 - 4 - 87 ல் சுவிற்சலாந்தில் நடைபெறும் உற்றூர், உறவினர், நண்பர்களுக்கு இத்தகவலை அறியத்தருகின்றோம்.

தகவல்: தாய், மனைவி, பிள்ளைகள், மைத்துனர்.

(சி-8892)

### கணபதிப்பிள்ளை செல்லையா

(அப்புச்சி)

நல்லூர் செட்டித்தெருவை சேர்ந்த கணபதிப் பிள்ளை செல்லையா அவர்கள் 01 - 04 - 87 அன்று காலமானுர். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும் லீலாவதி, வரதராஜா (மின்சார நிலையம், மன்னுர்) ஆகியோரின் அன்பு தகப்பனுரும் சன்முகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் மாமனுரும் சிவராஜா (சவுதி) யோகராஜா (ஆனந்தி) (சிவனந்தாகபே நல்லூர்) இந்திராணி, றஞ்சினி, ஜெயதாஸ், குமாரதாஸ், மனேகரன், ராசமணி ஆகியோரின் பேரனும் சர்மிலி, சர்மிளா, சஞ்சீர், சஞ்ஜீற், மயூரன், செந்தூரன், அர்ச்சனு ஆகியோரின் பூட்டனுமாவார் அன்னுரின் பூதவுடல் தகனக்கிரிகைக்காக 03 87 இன்று பி. ப. 3-30 மணிக்கு 20/5, செட்டித்தெ நல்லூரிலிருந்து கோம்பையன் மணல்மாயானத்துக்கு த்து செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: ஆணந்தி, நல்லூர். சி-8394

### திருமதி மதியாபரணம் பாக்கியரத்தினம்

உரும்பிராய் திருமதிமதியாபரணம் பாக்கியரத்சினம் காலமாகவிட்டார். அன்னர் காலஞ்சென்ற மதியாபரணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகாதேவா, மகேஸ்வரி, இராஜேஸ்வரி, தேவராஜ் (பணிப்பாளர், பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மாத்தளை) ஆகியோரின் அன்புத்தாயாரும், இரத்தினசிங்கம் (பொறியியலாளர், நைஜீரியா), காலஞ்சென்ற குணராஜா (சீனிக்கூட்டுத்தாபனம், கந்தளாய்), சரோஜினிதேவி ஆகியோரின் மாமியும், சாந்தகுமார் (லண்டன்), நரேஷ்குமார் (லண்டன், சுரேஷ்குமார் (லண்டன்), யுதிஷ்ரன், ஷயந்தினி, துஷ்யந்தினி, நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அன்னுரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (04 - 04 - 87) காலை 10-30 மணியளவில் 50, பலாலி வீதி, உரும்பிராயில் உள்ள அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை இளங்காடு மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: பிள்ளைகள்.

(கி8389)

### திருமதி யோகம்மா பரமசிவம்

திருமதி யோகம்மா பரமசிவம் மலேசியாவில் 31 - 03 - 87 இல் காலமாகிவிட்டார். அன்னுர் பரமசிவம் (பாரிஸ்டர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தன் (விரிவுரையாளர்), பரமானந்தன் (விரிவுரையாளர்), தங்கமணி (பாரிஸ்டர்), யோகானந்தன், குமாரானந்தன் ஆகியோரின் அருமைத்தாயாரும் காலம் சென்ற சனகசபை, திருமதி சுந்தரம் ஆகியோரின் அன்பு மகளும் செல்வரத்தினம், துரைசிங்கம், லீலாவதி, புஸ்பராணி, காலம் சென்ற மகேந்திரன், கமலராணி ஆகியோரின் சகோதரியும் நாகராசா, ரேதபுஸ்பம், தெய்வேந்திரம், விஸ்திரலிங்கம், பவளகாந்தன், ஆகியோரின் மைத்துனியுமாவர். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர். நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்

3, காரக்காட்டு லேன், வண். வட மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: திருமதி சு. கனகசபை.
சி-8396